# <u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

**<u>அ.வ எண்: 106/2011 வெங்கடேசன் (வாசா1) தேதி:07.10.2025</u>**

**<u>வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வழக்குரையில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்குரை தாக்கல் செய்ய நானும் என் தம்பியும் சேர்ந்துதான் வழக்கறிஞர் அலுவலகம் சென்றோம். வாசாஆ.1 கிரையஆவணத்தில் கண்ட சொத்தை நானும் என் தம்பியும் சேர்ந்து 1984 ம்வருடம் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். வாசாஆ.7 ஆவணம்பற்றி வழக்குரையில் விவரம் குறிப்பிட்டுள்ளோமா என்றால் இல்லை. ஆனால் அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோம். வழக்குரையில் கண்டுள்ள விவரங்களுக்கு எதிராக விவரங்களை எனது நிருபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டு இருந்தால் அது தவறுதானே என்றால் பிராதில் கூறிய விவரங்களைதான் எனது நிருபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன். பிராதில் குறிப்பிடாத சங்கதிகளை பற்றி எனது நிருபணவாக்குமூலத்தில் கூற நான் சட்டப்படி தடைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிராதுடன் தாக்கல் செய்துள்ள தோராய வரைபடத்தில் FC என குறிப்பிட்டுள்ள பகுதியின் கிழமேல் அளவு 16 அடி என்றால் சரிதான். அதேபோல் அந்த வரைபடத்தில் ED என குறிப்பிட்டுள்ள பகுதியின் கிழமேல் அளவு 11 அடி என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவாசொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். அந்த அறிக்கையின் முழு விவரமும் எனக்கு தெரியும். அந்த அறிக்கையில் சில குறைபாடுகள் உள்ளது. அதைபொறுத்து எனது தரப்பில் ஆணையர் அறிக்கைக்கு எதிராக ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆட்சேபணை என்பது ஆணையரின் வரைபடத்தை பொறுத்து ஆகும். அந்த அறிக்கையை நீக்கறவு செய்து வேறு அறிக்கை தாக்கல் செய்ய எங்கள் தரப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அந்த நீதிமன்ற ஆணையரை சாட்சியாக விசாரிக்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் FC பகுதி கிழமேல் 11 அடி என்றும் அதன்தென்புறம் உள்ள ED பகுதி கிழமேல் 7 அடி என்றும்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த வரைபடத்தில் அவ்வாறுதான் உள்ளது. இந்தவழக்கில் நீதிமன்றஆணையர் வழக்கு சொத்துக்களை பார்வையிட்டு தாக்கல் செய்த இடைக்கால அறிக்கை **Ex C1.** நீதிமன்றஆணையர் மீண்டும் தாவாசொத்துக்களை பார்வையிட்டு தாக்கல் செய்த இறுதி அறிக்கை மற்றும் நிலஅளவையரின் வரைபடங்களுடன் **Ex C2.** ஆணையர் அறிக்கையுடன் இணைக்கப்பட்ட ஆணையரின் வரைபடம் **Ex C3**. ஆணையர் அறிக்கையுடன் இணைக்கப்பட்ட சர்வேயர் வரைபடங்களில் நான் வடமேற்கு மூலையில் 5 அடி கிழமேல் அளவுள்ள சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் நான் அவ்வாறு ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை. நிலஅளவையர் வரைபடத்தில் கண்டபடி எங்கள் பிளாட்டுகளில் எல்லை என வரையறுத்து நட்டப்பட்டிருந்த கல்லுக்கு மேற்கே எங்களுக்கு 5 அடி இடம் உள்ளதாக அளவையர் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ஆக்கிரமிப்பை கண்டறிவதற்காகதான் எங்கள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய மனுதாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரின் அறிக்கை படி எங்கள் பிராதை சீர்திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு ஆலோசனை செய்து வருகிறேன். இந்தவழக்கு நிலுவையின் போது வழக்குசொத்தின் ஒருபகுதியை ராஜேஷ் கண்ணன் என்பவருக்கு கிரையம் செய்துகொடுத்துள்ளோம் என்றால் சரிதான். ஆனால் அது பிரச்சனை இல்லாத பகுதி ஆகும். அவ்வாறு அந்தசொத்தை பொறுத்து கிரையம் செய்ய நீதிமன்றத்தில் அனுமதி வாங்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் சரியானதா அல்லது தவறானதா என்றால் எனது வழக்கறிஞரிடம் ஆலோசனை செய்யவேண்டும்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.